**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.241/2022**
**வழக்கு சாட்சி D.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சுந்தரகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பொன்னிவாடி | வயது | : சுமார் 66 |
| தாலுக்கா | : தாராபுரம் | நாள் | : 03.02.2026 |
| மாவட்டம் | : திருப்பூர் | | |

**<u>வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

நான் எனது முதன்மை சாட்சியத்தில் இரண்டு ஆவணங்களை காட்டி என்னிடம் கேட்ட போது இரண்டு கையெழுத்துக்களை என்னுடைய தான் என்று நான் சொல்லியுள்ளேன். அந்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றும், அது என்ன ஆவணம் என்றும் எனக்கு தெரியாது என்றால் ? ஆவணம் எனக்கு தெரியும். சொத்து தான் எனக்கு தெரியாது. எத்தனை ஆவணத்தில், எத்தனை இடத்தில், எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் ? இரண்டு ஆவணத்தில் தாராபுரம் பதிவு ஆபிசில் வைத்து கையொப்பம் செய்தேன். இரண்டு ஆவணத்தில் சாட்சியாக ஒவ்வொரு கையொப்பம் தான் செய்துள்ளேன் என்றால்? ஆமாம். பதிவு அலுவலகத்தை தவிர வேறு எங்கு வைத்தும் நான் கையொப்பம் போடவில்லை என்றால் ? ஞாபகம் இல்லை. ரொம்ப நாள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. பழனிச்சாமியும், நானும் ஒரே ஊரில் சகோதரிகளை கொடுத்துள்ளோம் என்றால் ? ஆமாம். எனது சகோதரியையும் அவரது சகோதரியையும் பங்காளிகளுக்கு கொடுத்துள்ளோம். அதற்கு முன்பே நானும் பழனிச்சாமியும் மாமன், மைத்துனர் உறவு என்றால் ? ஆமாம். எங்களுக்குள் 40 ஆண்டுகளுக்கு மேலாக நெருக்கமான சினேகிதம் உள்ளது

என்றால் ? சரிதான். பதிவு ஆபிசிற்கு என்னை வாதி பழனிச்சாமி அழைத்து சென்றாரா என்றால் ? இல்லை. அவரது தகப்பனார் கிருஷ்ணசாமி கவுண்டர் உயில் எழுதுவதற்கு 2, 3 நாட்களுக்கு முன்பு பத்திரம் எழுத வேண்டும் என்றும், கையெழுத்து போடவேண்டும் என்று சொல்லி கூப்பிட்டார். நான் பத்திர ஆபிசிற்கு சென்ற போது கிருஷ்ணசாமி, பழனிச்சாமி அங்கு இருந்தாரா என்றால் ? கிருஷ்ணசாமி இருந்தார். பழனிச்சாமி இல்லை. கிருஷ்ணசாமி கவுண்டர் எங்கு வைத்து, எத்தனை ரேகை வைத்தார் என்றால் ? ஞாபகம் இல்லை. மற்றொரு சாட்சி போட்ட நபரை எனக்கு தெரியுமா என்றால் ? மகேந்திரன் என்ற பெயர் மட்டும் தெரியும். அவர் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. நான் பழனிச்சாமிக்கு வேண்டியவர், நண்பர் மற்றும் உறவினர் என்பதால் அவருக்காக வேண்டி பதிவு அலுவலகத்தில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், அதன்படி தற்போது நீதிமன்றத்தில் வந்து அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. கிருஷ்ணசாமி கவுண்டர் உயில் எழுதும் போது அவருக்கு 84 வயது இருக்கும் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. நான் பழனிச்சாமி என்பவருக்காக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.03 17:26:21 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.241/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கிருஷ்ணசாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பருத்தியூர் | வயது | : சுமார் 55 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 03.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

**நீதிமன்ற கேள்வி**

சாட்சியிடம் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் சாட்சி கையொப்பம் செய்துள்ளதை காட்டி இந்த கையொப்பம் உங்களுடையதா என்று கேட்ட போது முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் தான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்ததாகவும், நீதிமன்றத்தில் பிரமாண பத்திரிக்கை பதிவுசெய்து கையொப்பம் பெற்ற போது ஆங்கிலத்திலும், தமிழிலும் கையொப்பம் செய்துவிட்டதாக சாட்சி பதில் அளித்தார்.

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் என்ன படித்துள்ளார் என்றால் ? எனது தகப்பனார் படிக்கவில்லை. எனது தகப்பனார் கையொப்பம் செய்யமாட்டாரா என்றால் ? ஏற்கனவே கையொப்பம் போட்டு கொண்டு இருந்தார். தற்போது கையொப்பம் போடுவதில்லை. கைரேகை தான் வைக்கிறார். எனக்கும் எனது சகோதரிக்கும் எனது தகப்பனார் உயில்கள் எழுதி வைத்ததாக சொல்லியுள்ளதில் கைரேகை தான் வைக்கப்பட்டுள்ளதா என்றால் ? ஆமாம். எனது தகப்பனார்

அந்திமக்காலத்தில் கை நடுக்கம், உடல்நடுக்கத்தால் கையொப்பம் செய்ய இயலவில்லையா என்றால் ? நன்றாக தான் இருந்தார். அப்படி இருக்கம் பொழுது எனது தகப்பனார் கைரேகை வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் ? சரியல்ல. கடைசி காலத்தில் எனது தகப்பனாரையும் எனது தாயாரையும் நான் தான் பராமரித்து வந்தேன் என்றால் ? ஆமாம். எனது தகப்பனாரை மருத்துவமனைக்கு வாதி அழைத்து செல்லமாட்டார் என்றாலும், நான் தான் அழைத்து செல்வேன் என்றாலும் ? உண்மை. எனது தகப்பனாரை காரில் வைத்து தான் தாராபுரம், பழனி ஆகிய மருத்துவமனைக்கு மருத்துவத்திற்கு அழைத்து செல்வேன் என்றால் ? சில நேரங்களில் பேருந்திலும் அழைத்து செல்வேன். எனது தகப்பனார் இருக்கும் வரை அவர் தான் குடும்ப தலைவராக இருந்து குடும்பத்தையும், சொத்துக்களையும் பராமரித்து வந்தார் என்றால் ? உண்மை. குடும்ப சொத்துக்களில் வந்த வருமானத்தை கொண்டு தான் எனது தகப்பனார், நான் அனைவரும் சேர்ந்து வாங்கினோம். அதேபோல் 5, 6 சொத்துக்களை வாங்கியுள்ளோம் என்றால் ? ஆமாம். உயில் பத்திரத்தில் கண்டுள்ள மனை இடங்கள் அவ்வாறு வாங்கியது என்றால் ? உண்மை. இரண்டு உயில் பத்திரங்கள் நான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதை எனது தகப்பனார் தான் என்னிடம் வந்து கொடுத்தார் என்றால் ? உண்மை. இந்த உயில்கள் எழுதிக் கொண்டு வந்து கொடுத்த விபரம் எனது சகோதரிக்கு தெரியுமா என்றால்? தெரியாது. எந்த வருடம் கொண்டு வந்த உயிலை கொடுத்தார் என்றால் ? இறந்துபோவதற்கு 6 மாதத்திற்கு முன்பு கொண்டு வந்து உயிலை கொடுத்தார். 2017ம்ஆண்டு கொடுத்தார். உயில்களில் கண்டுள்ள மனை இடங்கள் போக சொத்துக்களில் விவசாய நிலங்கள் மற்றும் கிணறு பாத்தியம் வகையறா எழுதப்பட்டுள்ளதா என்றால் ? நிலங்கள் இருவருக்கும் எழுதப்பட்டுள்ளது. கிணறு எனக்கு மட்டும் எழுதப்பட்டுள்ளது. இரண்டு உயில்களிலும் விவசாய நிலங்களை பொறுத்து சர்வே எண்கள் முழுமையாக போட்டு எழுதப்படாமல் 2/3 பங்கு, 1/4 பங்கு என்று கண்டு தான்

எழுதப்பட்டுள்ளது என்றால் ? ஆமாம். அதன்படி நானும் எனது சகோதரியும் சொத்துக்களை அளந்து உட்பிரிவு தனித்தனியாக ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் ? இல்லை. உயில்களில் கண்டுள்ள விவசாய நிலம் பயிர் செய்யாமல் தரிசாக தான் உள்ளது என்றால் ? சரியல்ல. விவசாயம் எனது சகோதரி செய்கிறாரா அல்லது நான் செய்து வருகிறேனா என்றால் ? கோர்ட்டில் வழக்கு போட்ட பின்பு தரிசாக உள்ளது. உயில் எழுதப்பட்டு எவ்வளவு காலம் கழித்து எனது தகப்பனார் என்னிடம் உயில்களை கொடுத்தார் என்றால் ? ஞாபகம் இல்லை. உயில்களை எங்கு வைத்து தயார் செய்தார்கள், யார் எழுதினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ? எனது தகப்பனார் உயிலை என்னிடம் கொடுக்கும் போது சாட்சி கையொப்பம் செய்த நபர்களை நான் அழைத்ததன் பேரில் சாட்சி கையொப்பம் போட்டதாக என்னிடம் எனது தகப்பனார் சொன்னார். உயில் எழுதியது, பதிவு செய்தது, சாட்சி கையொப்பம் போட்டது நேரடியாக எனக்கு தெரியாது என்றால் ? நேரடியாக தெரியாது. உயிலில் சாட்சி கையொப்பம் போட்ட கிருஷ்ணமூர்த்தி எனக்கு எத்தனை நாட்களாக பழக்கம் என்றால் ? எனது சகோதரியையும், சாட்சி கிருஷ்ணமூர்த்தியின் சகோதரியையும் ஒரே ஊரில் திருமணம் செய்து கொடுத்தோம் அப்போது இருந்து எனக்கு பழக்கம். சுமார் 40 ஆண்டுகளாக பழக்கமாக என்றால் ? இருக்கும். எனக்கும் சாட்சிக்கும் என்ன சொந்தம் என்றால் ? கூப்பிடுவது மாமன், மைத்துனர் என்று கூப்பிட்டு கொள்வோம். தூரத்து வகையில் மாமன், மைத்துனர் என்ற உறவு என்றால் ? ஆமாம். சாட்சி கிருஷ்ணமூர்த்தி என்பவர் உறவினர் மற்றும் நீண்டகால நண்பர் என்பதாலும் எனக்காக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளார் என்றால் ? உண்மையல்ல. எனது சகோதரி தனியாக வழக்குரைஞரை வைத்து எதிர்வாதம் செய்யவில்லை என்றால் ? சரிதான். எனது சகோதரி வழக்கு நடத்த நீதிமன்றத்திற்கு வரமாட்டார் என்றால் ? இதுவரை வந்ததில்லை. இனிமேல் வருவாரா என்று நான் கருத்து சொல்ல முடியாது. வழக்கு தாக்கல்செய்த சமயத்திலேயே எனது சகோதரி

எனக்கு சொத்துக்களில் பாகம் வேண்டாம் என்றும், நான் வழக்கு நடத்த வரவில்லை என்றும் சொத்துக்களை ஆண் மக்களாகிய வாதியும், 1–ம் பிரதிவாதியாகிய நானும் வைத்துக் கொள்ள சொன்னார்கள் என்றால் ? உண்மையல்ல. தற்போதும் 2–ம் பிரதிவாதி வழக்கு நடத்த வரவில்லை என்றாலும், அவரது பெயரை வைத்து நான் தான் வழக்கு நடத்தி வருகிறேன் என்றாலும் ? உண்மையல்ல. இரண்டு உயில்களையும் எனது தகப்பனார் சுயமுடிவு எடுத்து அவராக எழுதிவைக்கவில்லை என்றாலும் ? நான் அவரை வேறு காரணத்தை சொல்லி அழைத்து சென்று எனக்கு வேண்டியவர்களை வைத்து உற்பத்தி செய்து கொண்டேன் என்றால் ? சரியல்ல. எல்லா சொத்துக்களும் பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்டவை தான் என்றும், அதன்படி வாதி வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.03 17:26:27 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்